1992 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கின்றனன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (24—4—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-12 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

70. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

71. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும்

கணக்குகள் (1959—ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது, (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) **அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

145. கோரிக்கை எண். 8—தேர்தல்கள் பற்றிய வரைவு உரை மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

146. கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

147. கோரிக்கை எண். 43—பல்வகை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்).

148. கோரிக்கை எண். 61—பல்வகை மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்.)

149. கோரிக்கை எண். 62—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்.)

150. 1983-84—ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

151. 1983-84—ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்.)

152. 1984-85—ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்.)

153. 1984-85—ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்.)

154. 1983-84—ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்.)

155. 1984-85—ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்.)